www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC

புவியியல் - I
Geography - I

Three Hours

Gr. 13 (2022)

22 T I

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. இலங்கையின் 1:50,000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படம் ஒன்றில் 5km நீளமான பிரதான வீதி ஒன்றினை வரைந்து காட்டுவதற்கு எடுக்க வேண்டிய சென்ரி மீற்றரின் அளவு யாது?
   (1) 08 cm (2) 09 cm (3) 10 cm
   (4) 12 cm (5) 20 cm (……)

2. விலகல் அளவையில் தரவுப் பரம்பல் ஒன்றின் இழிவுப் பெறுமானம் மற்றும் ஆகக் கூடிய பெறுமானங்களுக்கு இடையிலான இடைவெளியைக் காட்டுவது
   (1) நியம விலகல் (2) வீச்சு (3) சராசரி விலகல்
   (4) இடைக் காலணை விலகல் (5) சராசரி விலகல் வீச்சு (……)

3. 1:50,000 இடவிளக்கப்படமொன்றில் எடுத்துக் காட்டப்படும் வடிகால் அம்சங்கள் மூன்றினைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
   (1) கழிமுகம், நீர் வீழ்ச்சி, மேட்டு நிலம்
   (2) நீர் வீழ்ச்சி, நீர்ப் பிரிநிலம், சேணக் கணவாய்
   (3) ஆற்றுமியாந்தர், நீர்வீழ்ச்சி, கூம்புக்குன்று
   (4) பின்னிய ஆறு, ஆற்றுமியாந்தர், V வடிவப் பள்ளத்தாக்கு
   (5) பின்னிய ஆறு, பனியெருந்தேரி, குழிவுச் சாய்வு (……)

4. பின்வருவனவற்றிள் முதனிலைத் தரவுகள் எவை?
   (1) நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள்
   (2) இடவிளக்கப்படத்திலிருந்து பெறப்படும் தரவுகள்
   (3) இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள்
   (4) செய்மதிப் படிமங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள்
   (5) மத்திய வங்கி அறிக்கையிலிருந்து பெறப்பட்ட தரவுகள் (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

5. கொழும்பு நகரத்திலிருந்து கண்டி, காலி, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய நகர மையங்களினால் பெற்றுக் கொள்ளப்படும் நாளாந்த தொலைபேசிச் செய்திகளின் இடம் சார்ந்த பரம்பலை எடுத்துக் காட்டுவதற்குப் பொருத்தமான படவரை கலை நுட்ப முறையாது?
   (1) வட்ட வரைபுகள் (2) புள்ளிப் படங்கள் (3) பாய்ச்சல் படங்கள்
   (4) கோட்டு வரைபு (5) சாதாரண பார் வரைபு (…...)

6. பூகோள இடநிலைப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி, இடமொன்றின் அமைவிடத்தினைச் சரியாகத் தீர்மானிப்பதற்கு வானவெளியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த செய்மதிகளின் எண்ணிக்கை யாது?
   (1) இரண்டு (2) நான்கு (3) எட்டு
   (4) இருபத்தி நான்கு (5) முப்பத்தியிரண்டு (…...)

7. புவியியல் தகவல் முறைமையின் (GIS) நான்கு கூறுகளைக் காட்டுகின்ற சரியான தெரிவு எது?
   (1) தரவு, வன்பொருள், மென்பொருள், பயனிகள்
   (2) முறைகள், வன்பொருள், கணினி, மென்பொருள்
   (3) வன்பொருள், மென்பொருள், கணினி, தரவு
   (4) தரவு, மென்பொருள், இலக்கமுறைப்படங்கள், வன்பொருள்
   (5) தரவு, இலக்கமுறைப்படங்கள், பயனிகள், முறைகள் (…...)

8. மாவட்டங்களின் குடித்தொகைப் பரம்பலை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தக் கூடிய படவரை கலைநுட்ப முறை யாது?
   (1) புள்ளிப் படங்கள் (2) வட்ட வரைபுகள்
   (3) பல்கோட்டு வரைபுகள் (4) சாதாரணபார் வரைபுகள்
   (5) பாய்ச்சல் படங்கள் (…...)

9. இலங்கையின் 1:50,000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படங்களைத் தயாரித்து வழங்குகின்ற திணைக்களம்
   (1) இலங்கை பாதுகாப்புத் திணைக்களம்
   (2) இலங்கை நிலஅளவைத் திணைக்களம்
   (3) இலங்கை புவிச்சரிதவியல் திணைக்களம்
   (4) இலங்கை சுற்றாடல் பாதுகாப்புத் திணைக்களம்
   (5) இலங்கை சுற்றுலா அதிகார சபை (…...)

10. பின்வருவனவற்றுள் பண்பு சார் தரவு எது?
   (1) அரசாங்க சேவையாளர் குழுவொன்றின் மாதாந்த வருமானம்
   (2) மாணவன் ஒருவனின் உயரம்
   (3) நெற்காணி ஒன்றின் விளைச்சல்
   (4) உற்பத்திப் பொருள் ஒன்றின் விருப்பம் அல்லது விருப்பமின்மை
   (5) கம்பனியொன்றின் இலாபம் (…...)

11. மூன்றாம் வகை நிலவுருவங்களை மாத்திரம் கொண்டுள்ள விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) சமுத்திர வடி நிலங்கள், கண்டத்திணிவுகள், மடிப்பு மலைகள், எரிமலைகள்
   (2) பானைக் குழிவுகள், மடிப்பு மலைகள், மலைத் தொடர், பிளவுப் பள்ளத்தாக்குகள்
   (3) கடற்குவடுகள், பானைக் குழிவுகள், கூர் நுனி உச்சிகள், செம்மறியுருப் பாறை
   (4) ஆற்றுமியாந்தர், பானைக் குழிவுகள், பின்னிய ஆறு, சமுத்திர வடி நிலங்கள்
   (5) சமுத்திர வடி நிலங்கள், மேட்டு நிலங்கள், சமுத்திரப் பாறைத் தொடர்கள், எரிமலைகள் (…...)

12. நீண்ட கால அடிப்படையில் ஏதாவது இடத்தின் அல்லது பிரதேசத்தில் நிலவுகின்ற சராசரி வளி மண்டல நிலமை
   (1) படிவு வீழ்ச்சி (2) வானிலை (3) அல்பிடோ
   (4) சூழல் நழுவு வீதம் (5) காலநிலை (…...)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

13. புவிக்கோளத்தில் இடையோட்டினையும், கோளவகத்தினையும் பிரிக்கும் எல்லை
    (1) கூட்டன் பேர்க் எல்லை
    (2) மொகோவிச் எல்லை
    (3) மாற்றரிப்பு எல்லை
    (4) படைத் தரிப்பு எல்லை
    (5) கொன்ராட் எல்லை (…...)

14. மண்ணின் படையமைப்பில் சேதன கனியங்கள், உக்கிய கனியங்களை அதிகளவில் கொண்டிருப்பது.
    (1) O படை (2) B படை (3) A படை
    (4) C படை (5) R படை (…...)

15. இலங்கையில் சிலாபத்தின் வடக்கே தப்போவ, ஆண்டிக்கம, பள்ளம பிரதேசங்களில் பரந்துள்ள பாறை வகை
    (1) கருங்கல் (2) சுண்ணக்கல் (3) குவாசைட்
    (4) யுராசிக் பாறை (5) சிலிக்கேற் (…...)

16. அகவிசைகளால் மாத்திரம் உருவாக்கப்படுபவை
    (1) தகட்டோட்ட செயன்முறை, புவி நடுக்கங்கள், திணிவசைவு, புவி ஓட்டு அசைவு
    (2) புவியோட்டு அசைவு, புவிநடுக்கங்கள், எரிமலைச் செயற்பாடுகள், தகட்டுடோட்டச் செயன்முறை
    (3) புவியோட்டு அசைவு, புவிநடுக்கங்கள், காற்று, எரிமலைச் செயற்பாடு
    (4) புவி ஓட்டு அசைவுகள், நிலச்சரிவுகள், புவிநடுக்கங்கள், எரிமலைச் செயற்பாடு
    (5) நிலச்சரிவுகள், திணிவசைவுகள், காற்று, புவியோட்டு அசைவு (…...)

17. சான் அன்றியாஸ் குறை அமைந்துள்ள இரு தகடுகள்
    (1) இந்தோ – அவுஸ்ரேலியத் தகடு, யுரேசியத் தகடு
    (2) ஆபிரிக்கத் தகடு, அரேபியத் தகடு
    (3) பசுபிக் தகடு, இந்தோ அவுஸ்ரேலியத் தகடு
    (4) வட அமெரிக்கத் தகடு, ஆபிரிக்கத் தகடு
    (5) வட அமெரிக்கத் தகடு, பசுபிக் தகடு (…...)

18. தள்ளல் எரிமலை நிலவுருவங்களை மாத்திரம் கொண்டுள்ள விடைத் தொகுதி
    (1) லாவாக் கூம்பு, கிடைத் தீப்பாறை, எரிமலை வாய்
    (2) குத்துத் தீப்பாறை, எரிமலை வாய் எரி, எரிமலை வாய்
    (3) எரிமலை வாய், லாவாக் கூம்பு, லாவா மேட்டு நிலம்
    (4) குத்துத் தீப்பாறை, கிடைத் தீப்பாறை, வில்லைத் தீப்பாறை
    (5) உள்ளீட்டுலம், குமிழ் தீப்பாறை, வில்லைத் தீப்பாறை (…...)

19. மலை பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் அரித்தலினால் மாத்திரம் உருவாக்கப்படும் நிலவுருவங்களைக் கொண்ட விடைத் தொகுதி
    (1) வட்டக்குகை, U வடிவ பள்ளத்தாக்கு, குத்துப் பாறை வாற்குன்று
    (2) நீள்குன்று, கூம்பகச்சிகரம், வட்டக்குகை ஏரி
    (3) கூர்நுனி உச்சி, இடைக்குன்று, வட்டக்குகை
    (4) செம்மறியுருப்பாறை, நுழைகளிகள், குத்துப்பாறை, வாற்குன்று
    (5) நுழைகளிகள், தொங்கு பள்ளதாக்கு, நாடா ஏரிகள் (…...)

20. ஞாயிற்றுக் கதிர்வீசலின் “அல்பிடோ” என்பது
    (1) படை மண்டலத்தினை வெப்பமாக்குவது
    (2) புவியையும் வளிமண்டலத்தையும் வெப்பமாக்குவது
    (3) புவிமேற்பரப்பிலிருந்து தெறிக்கப்படுவது
    (4) புவியை நோக்கிப்பரவிக் காணப்படுவது
    (5) மாறன் மண்டலத்தினை வெப்பப்படுத்துவது (…...)



agaram.lk

21. அயன ஈரமற்றும் உலர் காலநிலை (AW) பரந்துள்ள இருநாடுகள் கொண்ட விடையைத் தெரிக.
(1) பிறேசில், கொங்கோ (2) இலங்கை, லைபீரியா (3) மியான்மார், போர்ணியோ
(4) மியான்மார், தாய்லாந்து (5) சீனா, தாய்வான் (......)

22. இலங்கைக்கு சூறாவளி மூலம் மழைவீழ்ச்சி கிடைக்கும் மாதங்கள்
(1) மே – செப்ரெம்பர் (2) டிசம்பர் - பெப்ரவரி (3) மார்ச் - ஏப்ரல்
(4) ஜனவரி – பெப்ரவரி (5) நவம்பர் - டிசம்பர் (......)

23. பச்சை வீட்டு வாயுக்களை உறுஞ்சக் கூடிய சக்தி வாய்ந்த இயற்கை ஊடகம்
(1) காற்று (2) நிலம் (3) நீர் (4) காடுகள் (5) சூரிய சக்தி (......)

24. உயிர்ப் பல்வகைமையை அதிகளவில் கொண்டிருக்கும் உயிர்ப் பெருந் திணிவு
(1) மத்திய தரைக்காடுகள் (2) அயன மழைக்காடுகள் (3) இடைவெப்ப வலயக்காடுகள்
(4) சவன்னா புல் நிலங்கள் (5) பாலை வனங்கள் (......)

25. ரம்சார் பிரகடனத்தின் பிரதான நோக்கம்
(1) ஈரநிலங்களைப் பாதுகாத்தல் (2) உயிர்பல்வகைமையைப் பாதுகாத்தல்
(3) அயன மழைக் காடுகளைப் பாதுகாத்தல் (4) ஓசோன் படையைப் பாதுகாத்தல்
(5) கடற்கரையோரங்களைப் பாதுகாத்தல் (......)

26. சுருங்கிய சனத்தொகைக் கூம்பு ஒன்றின் மூன்று பிரதான அம்சங்களைத் தரும் விடை
(1) உயர்ந்த வாழ்வு எதிர்பார்ப்புக்காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
(2) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், அதிக பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
(3) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், அதிக பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதம்
(4) உயர்ந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், அதிக பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
(5) உயர்ந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், அதிக பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதம்
(......)

27. பருமட்டான பிறப்பு விகிதத்திலிருந்து பருமட்டான இறப்பு விகிதத்தினைக் கழிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவது.
(1) பிறப்பு வீதம் (2) இறப்பு வீதம் (3) சர்வதேச இடப்பெயர்வு
(4) இயற்கை அதிகரிப்பு (5) ஆயுட் காலம் (......)

28. குடித்தொகையின் முதுமையடைதலுக்கான இரண்டு காரணிகளைக் கொண்டிருக்கும் சரியான விடைத் தெரிவு யாது?
(1) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் குறைவு, கருவளத்தின் அதிகரிப்பு
(2) மருத்துவ வசதி, கல்வியறிவு வீழ்ச்சி
(3) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் அதிகரிப்பு, கருவளத்தின் வீழ்ச்சி
(4) சமூக அந்தஸ்த்து, போசாக்கு அற்ற உணவு
(5) போசாக்கான உணவு, ஆயுள் எதிர்பார்க்கைக் காலத்தின் குறைவு (......)

29. ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டதாகவும், வீதிவலையமைப்பு முறையற்றதாகவும் காணப்படும் குடியிருப்பு
(1) தனி வீடு (2) நகரம் (3) சிறிய நகரம்
(4) பெரு நகரம் (5) கிராமம் (......)

30. இலங்கையின் கொழும்பு மாவட்டத்தின் கிராம நகரக் குடியிருப்பிற்கு உதாரணமாகக் கூறக் கூடியவை
(1) மீரிகம, மினுவான் கொட (2) கோமாகம, அத்துக்கிரிய (3) பிலிமத்தலாவ, பெனிதெனிய
(4) கொங்கல, லபுதுவ (5) நிட்டம் புவ, கராபிட்டிய (......)

31. மத்திய ஐரோப்பாவின் நகராக்க வலயம்.
(1) கிறீன் பனானா (2) ப்ளூ பனானா (3) கோல்டன் பனானா
(4) ரெட் பனானா (5) வைற் பனானா (......)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

32. IR8 நெல்லினத்தை உருவாக்கிய ஆராய்ச்சி நிலையம் எது?
(1) சர்வதேச விவசாய ஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை சபை
(2) மெச்சிக்கோவின் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம்
(3) ஜப்பானின் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம்
(4) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் - இந்தியா
(5) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் - பிலிப்பைன்ஸ் (……)

33. சேதன விவசாயத்தில் பின்பற்றப்படும் பல்லினப் பயிர்ச் செய்கை முறை மூலம் கிடைக்கின்ற நன்மை
(1) களைகளுக்கு அதிக வெப்பம் கிடைக்கின்றது
(2) அறுவடைக் காலம் குறைவடைகின்றது
(3) உயிர்ப் பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது
(4) நிலத்தின் உவர் தன்மை அதிகரிக்கின்றது
(5) பீடைகள் அதிகரிக்கின்றது (……)

34. நிலத்துண்டுகள் சிறியவை, குடும்ப அங்கத்தவர்கள் தொழிலில் ஈடுபடுதல், இயந்திரப் பயன்பாடு குறைவு போன்ற இயல்புகளுடன் தொடர்பான பயிர்ச் செய்கை
(1) வர்த்தகப் பயிர்ச் செய்கை
(2) வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை
(3) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை
(4) பழச் செய்கை
(5) சேனைப் பயிர்ச் செய்கை (……)

35. பெரிய பிரித்தானியாவில் இரும்புத்தாது பரந்துள்ள வலயம்
(1) தென்சொர்க்கோவ், ஷாங்ஸி பிரதேசம்
(2) பேரேரிப் பிரதேசம், எமர்ஸ்லி மலைத்தொடர்
(3) தென்வேல்ஸ், செவீல்ட் பிரதேசம்
(4) குஸ்நெட், வேல்ஸ்
(5) மிட்லான்ட் பள்ளத்தாக்கு, ஸ்கொட்லாந்துப் பிரதேசம் (……)

36. இலங்கையில் பொஸ்பேற், இல்மனைட் ஆகிய கனியங்கள் பரந்துள்ள இரு இடங்கள்
(1) புல் மோட்டை, பொல்கொட்டுவ
(2) எப்பாவெல, புல் மோட்டை
(3) தங்கொட்டுவ, கைக்காவெல
(4) தங்கொட்டுவ, மீரிகம
(5) மீரிகம, பொல்கொட்டுவ (……)

37. தேர்ச்சி மிக்க தொழிலாளர் வளம் பிரதான காரணியாகக் காணப்படும் கைத்தொழில்
(1) ஆடை தயாரிப்புத்தொழில்
(2) இரும்புருக்குக் கைத்தொழில்
(3) உணவுக் கைத்தொழில்
(4) இலத்திரனியல் கைத்தொழில்
(5) விவசாய உற்பத்திகளை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தும் கைத்தொழில் (……)

38. இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட சுண்ணாம்புக்கல், ஜிப்சம் ஆகிய மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு சீமெந்துக் கைத்தொழில் அமைக்கப்பட்ட இடம்
(1) புத்தளம் (2) திருகோணமலை (3) காலி
(4) காங்கேசன்துறை (5) சிலாபம் (……)

39. சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் இலங்கைக்கு வருவதற்கான பிரதான நோக்கம்
(1) கல்வி (2) கண்காட்சி (3) ஓய்வுபொழுது போக்கு
(4) சுகாதாரம் (5) விளையாட்டு (……)

40. இலங்கையின் பிரதான சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை.
(1) ஏழு (2) ஆறு (3) ஐந்து (4) நான்கு (5) மூன்று (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

*1.* இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1: 50,000** அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு :**

✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் விடைத்தாளில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

✶ இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.

✶ உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் பரப்பளவினைச் சதுர km தருக. *(01 புள்ளிகள்)*

(ii) *1 – 6* வரை இலக்கமிடப்பட்ட பௌதிக பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) C யினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் பெரும் தோட்டப்பயிர்.

D யினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் வீதி

F,H இனால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக. *(01 புள்ளிகள்)*

(iv) படப் பகுதியின் வடகிழக்குப் பகுதியின் மானிட நடவடிக்கைகளை வரையறுத்துள்ள இரண்டு காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(v) படப் பிரதேசத்தின் நெற் செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த மூன்று காரணிகளை விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(vi) தரைத்தோற்றத்திற்கும் வீதி வலைப் பின்னலுக்குமிடையில் காணப்படும் இடைத் தொடர்பினை விளக்குக. *(03 புள்ளிகள்)*

(vii) பிரதேசத்தின் குடியிருப்புப் பாங்கு தொடர்பாக சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

*2.* தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) அந்தீஸ்மலைத்தொடர்

(ii) கலபாகொஸ் தீவுகள்

(iii) பெங்குவலா நீரோட்டம்

(iv) மகரக் கோடு

(v) மறேடாலிங் நதி

(vi) மத்திய தரைக் கடல்

(vii) டோக்கியோ நகரம்

(viii) பாரசீக வளைகுடா



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(ix) பாற்பண்ணைக் கைத்தொழிலில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடு

(x) சர்வதேச சுனாமி எச்சரிக்கை மையம் அமைந்துள்ள தீவு

## பகுதி - III

3. (i) படங்கள் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக்கிய நான்கு சந்தர்ப்பங்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) தாளில் படங்களை அச்சுப் பதிப்பு செய்யும் போது பயன்படுத்தப்படுகின்ற நான்கு கருவிகளைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டமிடும் போது இடவிளக்கப் படத்தின் பங்களிப்பினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) 1: 50, 000 இடவிளக்கப் படத்தில் ஒரு அமைவிடத்தினை எடுத்துக் காட்டுவதற்குப் பயன் படுத்தப்படுகின்ற இரண்டு முறைகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

4. (i) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) என்பதனை வரையறை செய்க. *(02 புள்ளிகள்)*

(ii) பூகோள இடை நிலைப்படுத்தல் முறைமையொன்றின் பிரதான கூறுகளைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) பூகோள இடை நிலைப்படுத்தல் முறைமைத் தரவுகளின் துல்லியமான தன்மையைப் பாதிக்கும் மூன்று காரணிகளை விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) பூகோள இடை நிலைப்படுத்தல் முறைமையின் மூன்று நன்மைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

5. (i) தரவு சேகரிக்கும் நுட்ப முறைகளில், முதல் நிலைத் தரவுகளைச் சேகரிக்கும் நான்கு நுட்ப முறைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இணையத்தளம் மூலம் தரவு சேகரிக்கப்படும் போது கிடைக்கின்ற இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதி கூலங்களையும் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) கீழே A,B எனத் தரப்பட்டவற்றை விளக்குக.

A. தரவு வரிசை (Data Array)

B. ஆகாரம் *(03 புள்ளிகள்)*

(iv) தற்காலத்தில் கணினிப் படங்களின் பாவனை அதிகரித்திருப்பதற்கான மூன்று காரணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

6. அட்டவணை 1 இல் புவியியல் பாடத்தில் 28 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1: புவியியல் பாடத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 | 25 | 52 | 17 | 58 | 70 | 58 |
| 65 | 75 | 42 | 82 | 25 | 78 | 42 |
| 36 | 42 | 48 | 55 | 89 | 09 | 48 |
| 78 | 58 | 60 | 65 | 42 | 46 | 50 |

(i) மேற்படி தரவினைப் பயன்படுத்தி வீச்சினைக் கணிக்க. (01 புள்ளி)

(ii) மீடிறன் பரம்பல் அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) திரள் மீடிறன் அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) இழைவரையம் மீடிறன் பல்கோணி என்பவற்றினை வரைக. (08 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC


| புவியியல் - II<br>Geography - II | Three Hours<br>Gr. 13 (2022) | 22 | T | II |
|---|---|---|---|---|

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I பௌதிகப் புவியியல்




1. (i) அருகில் தரப்பட்டுள்ள படத்தில் A,B,C,D என்ற எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் பகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) A,C எனப் பெயரிடப்பட்ட பகுதிகளின் பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) புவியோட்டில் இனம்காணப்பட்டுள்ள இரண்டு வகையான படைகளினதும் பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) புவித்தகடுகள் அசைவிற்குள்ளாகின்ற மூன்று முறைகளையும் விளக்கப்படங்கள், உதாரணங்களின் உதவியுடன் விபரிக்குக. (08 புள்ளிகள்)

2. (i) பாலைவனப் பிரதேசங்களின் பண்புகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)
   (ii) பாலைவனச் சூழலில் காற்று அரித்த பருப்பொருட்களைக் கொண்டு செல்லும் மூன்று முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) பாலைவனப் பிரதேசத்தில் உருவாகின்ற மூன்று வகையான மணற்குன்றுகளினை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) காற்றரிப்பினால் உருவாகின்ற மூன்று நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) கீழே A, B எனத்தரப்பட்டுள்ள ஈர நிலங்கள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.
   A – செயற்கையான ஈரநிலங்கள்
   B – நன்னீர் சேற்றுநிலம் (02 புள்ளிகள்)
   (ii) இல்ங்கையின் காட்டுச் சூழல் தொகுதியில் உள்ளடக்கப்படும் பருவக் காற்றுக் காடுகளின் மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(iii) (a) இலங்கையில் வன மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட சரணாலயங்களின் மூன்று வகைகளை உதாரணங்களுடன் தருக.

(b) கண்டல் தாவரங்களின் மூன்று இயல்புளைத் தருக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சூழற்தொகுதிகள் எதிர்நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

4. (i) அனர்த்தம், இடர் வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)


(ii) இயற்கை இடர்களைப் பாகுபடுத்துகின்ற இரண்டு முறைகளையும் உதாரணங்களுடன் தருக. (06 புள்ளிகள்)

(iii) அனர்தங்களைத் துரிதப்படுத்துகின்ற மூன்று மானிடக் காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நிலச்சரிவினால் பௌதிகச் சூழல், மானிடச் சூழலுக்கு ஏற்படும் மூன்று பாதிப்புகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II மானிடப் புவியியல்

5.




மேலே தரப்பட்ட உலக சனத்தொகைப் பரம்பல் படத்தினை அவதானித்துக் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

(i) A,B,C,D எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள சனத்தொகைப் பரம்பல் பிரதேசங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) A,C பிரதேசங்களின் சனத்தொகைப் பரம்பலை வரையறுத்துள்ள பௌதிக காரணிகள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) B, D பிரதேசங்களின் சனத்தொகைப் பரம்பலைத் தீர்மானித்துள்ள மானிடக் காரணிகள் மூன்றினை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பிறப்புவீதம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

6. (i) உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாயத்தில் மேற்கொள்ளப்பட்ட பசுமைப் புரட்சியின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட நான்கு விடயங்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்ற மரபணுத் தொழில் நுட்பத்தின் மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) சேதனப் பயிர்ச் செய்கை மூலம் கிடைக்கின்ற மூன்று நன்மைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் விவசாயத் துறையில் ஏற்படுகின்ற வீண்விரயத்தைத் தடுப்பதற்காக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மூன்று முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) சுரங்கங்களிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் கனியநெய் தவிர்ந்த நான்கு கனியங்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) கனியநெய்யின் பயன்கள் இரண்டினையும், அதன் இயல்புகள் இரண்டினையும் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) கனிய நெய் வர்த்தகத்தில் காணப்படும் முனைப்பான பண்புகள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) கனிய நெய்யின் விலை அதிகரித்துச் செல்வதனால் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள் எதிர்கொள்கின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)


8. (i) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 ஆம் ஆண்டு அறிக்கையின்படி இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப முதன்மை பெறுகின்ற முதல் நான்கு நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருவதற்கான மூன்று காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள சாதகமான மற்றும் பாதகமான மூன்று விளைவுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய மூன்று நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022

**தரம் 13 புவியியல் படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)**



Agaram.LK - Keep your dreams alive!